

ஆலந்தூர் தொகுதிக்குட்பட்ட ஆலந்தூரில் நடைபெற்ற வாக்குச்சாவடி நிலைமுகவர்கள் (BLA2) கலந்தாலோசனைக் கூட்டத்தில் குறு,சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி கழக சட்டத்துறை செயலாளர் என்.ஆர்.இளங்கோ ஆகியோர் கலந்துகொண்டு ஆலோசனைகளை வழங்கினார்கள். அருகில் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி, என்.சந்திரன், பி.குணாளன், டி.பாபு, ஏ.வந்தேமாதரம், ஜி.கே.ரவி, எம்.எஸ்.கே.இப்ராகிம், கோல்டு டி.பிரகாஷ் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

## நாமக்கல் கிழக்கு மாவட்டத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் குடும்ப நல நிதியாக

# மறைந்த 1265 கழக உறுப்பினர்கள் குடும்பத்திற்கு ரூ. 63 லட்சத்து 25 ஆயிரம் நிதி உதவி!

## கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி வழங்கினார் - அமைச்சர் மரு.மதிவேந்தன் பங்கேற்பு!

நாமக்கல், , ஜூலை. 18 நாமக்கல் கிழக்கு மாவட்டத்தில் ஒன்றிய, நகர, பேரூர்களில் மறைந்த 1265 கழக அடிப்படை உறுப்பினர்களின் குடும்பத்திற்கு முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் குடும்ப நல நிதியாக ரூ. 63 லட்சத்து 25 ஆயிரத்தை கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி வழங்கினார்

நாமக்கல் கிழக்கு மாவட்டத்தில் ஒன்றிய, நகர, பேரூர்களில் கடந்த 2021 - மார்ச் முதல் தற்பொழுது வரை மறைந்த கழக நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்களது அஞ்சலி செலுத்தி, முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் குடும்ப நல நிதி வழங்கிட வந்துள்ளார். அதன்படி, நாமக்கல் கிழக்கு மாவட்டத்தில் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் குடும்ப நலநிதி வழங்கும் நிகழ்ச்சி ஒன்றிய, நகர, பேரூர்களில் நடைபெற்றது.

**நாமக்கல்** கிழக்கு மாவட்டம் நாமக்கல் தெற்கு நகரத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் நாமக்கல் தெற்கு நகர கழக செயலாளர் ராணா ஆர் ஆனந்த் தலைமை தாங்கினார். சட்டமன்ற உறுப்பினர் பெ.இராமலிங்கம் முன்னிலை வகித்தார். இந்நிகழ்வில் வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன், கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி ஆகியோர் கலந்து கொண்டு மறைந்த 15 கழக உறுப்பினர்களின் குடும்பத்தாருக்கு அஞ்சலி செலுத்தி தலா ரூ.5000/ வீதம் ரூ. 75 ஆயிரம் வழங்கினர்.

இந்நிகழ்வில் மாவட்ட அவைத் தலைவர் சி.மணிமாறன், நகர்மன்ற தலைவர் து.கலாநிதி, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் சி.விஸ்வநாத், து அமைப்பாளர் எம்பரர் வ. இளம்பரிதி, மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கிருபாகரன், நகர இளைஞர் அணி அமைப்பாளர் சதீஸ்குமார் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

வெண்ணந்தூர் ஒன்றியம் மற்றும் வெண்ணந்தூர் பேரூரில் நடைபெற்ற நிகழ்ச்சியில் வெண்ணந்தூர் ஒன்றிய கழகச் செயலாளர் ஆர்.எம்.துரைசாமி தலைமை தாங்கினார். வெண்ணந்தூர் பேரூர் கழக செயலாளர் ஆர்.எஸ். எஸ்.ராஜேஷ் முன்னிலை வகித்தார்.

இந்நிகழ்வில் வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன், கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி ஆகியோர் கலந்து கொண்டு வெண்ணந்தூர் ஒன்றியப் பகுதியில் மறைந்த 107 கழக உறுப்பினர்களுக்கு அஞ்சலி செலுத்தி, மறைந்த 107 கழக உறுப்பினர்கள் குடும்பத்திற்கு தலா ரூ.5000 வீதம் ரூ. 5 லட்சத்து 35 ஆயிரம், வெண்ணந்தூர் பேரூரில் மறைந்த 33 கழக உறுப்பினர்களுக்கு தலா ரூ. 5000 வீதம் குடும்பத்திற்கு ரூ. 1 லட்சத்து 65 ஆயிரம் வழங்கினர்.

இந்நிகழ்வில் நாமகிரி பேட்டை ஒன்றிய கழக செயலாளர் கே.பி.இராமசுவாமி, மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் ஏ.ஆர். துரைசாமி, களிர் தொண்டரணி அமைப்பாளர் கௌரி, ஒன்றிய மாணவர் அணி அமைப்பாளர் இரா. அன்பு மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

**புதுச்சத்திரம் தெற்கு** ஒன்றியத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் நாமக்கல் சட்ட மன்ற உறுப்பினர் பெ. இராமலிங்கம் தலைமை தாங்கினார். ஒன்றிய கழக செயலாளர் ஆர். ஜெயபிரகாஷ் முன்னிலை வகித்தார். மறைந்த 35 கழக உறுப்பினர்களுக்கு அஞ்சலி செலுத்தி, மறைந்த 35 கழக உறுப்பினர்கள் குடும்பத்தினருக்கு தலா ரூ.5000 வீதம் ரூ. 1 லட்சத்து 75 ஆயிரம் கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி வழங்கினார்.

இந்நிகழ்வில் மாவட்ட ஊராட்சி குழு துணை தலைவர் செந்தில்குமார், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் சி.விஸ்வநாத், அவை தலைவர் இளங்கோ, ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் சரவணகுமார், ஒன்றிய துணை செயலாளர்கள் அண்ணாதுரை, சுப்பிர மணி, பிரபாவதி, பொருளாளர் முருகேசன், ஊராட்சி மன்ற தலைவர் தியாகராஜன், மணிமேகலை, அண்ணாதுரை மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்

**புதுச்சத்திரம் வடக்கு** ஒன்றியத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் நாமக்கல் சட்ட மன்ற உறுப்பினர் பெ. இராமலிங்கம் தலைமை தாங்கினார். ஒன்றிய கழக செயலாளர் எம்.பி. கௌதம் முன்னிலை வகித்தார். இந்நிகழ்வில் மறைந்த 13 கழக உறுப்பினர்களுக்கு அஞ்சலி செலுத்தி, மறைந்த 13 கழக உறுப்பினர்கள் குடும்பத்தி னருக்கு தலா ரூ.5000 வீதம் ரூ. 65 ஆயிரம் கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி வழங்கினார்.

நிகழ்ச்சியில் பொதுக் குழு உறுப்பினர் சுசிதரன், மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் செந்தில், ஒன்றிய குழு துணை தலைவர் ராம்குமார் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் சி.விஸ்வநாத், பொறியாளர் அணி துணை அமைப்பாளர் குமார், நிர்வாகிகள் பாபு, பெரிய சாமி, சுந்தரம் மற்றும் ஊராட்சி மன்ற தலைவர்கள், ஒன்றிய குழு உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**மோகனூர் கிழக்கு** ஒன்றியம் மற்றும் பேரூராட்சியில் நடந்த நிகழ்ச்சியில் நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் பெ.இராமலிங்கம் தலைமை தாங்கினார். ஒன்றிய கழக செயலாளர் பெ நவலடி, பேரூர் கழக செயலாளர் சி செல்லவேல் என்கிற செல்லப்பன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இந்நிகழ்வில் மோகனூர் ஒன்றியப் பகுதியில் மறைந்த 53 கழக உறுப்பினர்கள் பேரூராட்சியில் 43 உறுப்பினர்கள் என 96 கழக உறுப்பினர்கள் குடும்பத்தினருக்கு ரூ. 4 லட்சத்து 80 ஆயிரம் கே.ஆர்.என். இராஜேஸ்குமார் எம்.பி வழங்கினார்.

இந்நிகழ்வில் மாநில விவசாய தொழிலாளர் அணி துணை செயலாளர் ப.கைலாசம், பொதுக்குழு உறுப்பினர்கள் சரவணகுமார், பூவராகவன், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் பொன்.சித்தார்த், பேரூர் இளைஞர் அணி அமைப்பாளர் மோகன்குமார், பேரூராட்சி தலைவர் வனிதா மோகன்குமார், பேரூராட்சி உறுப்பினர் இரா.உடையவர், மாவட்ட பிரதிநிதி உதயகுமார் மற்றும் வார்டு கழக செயலாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**நாமகிரிப்பேட்டை** ஒன்றியத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் நாமகிரிப் பேட்டை ஒன்றிய கழக செயலாளர் கே.பி.இராமசுவாமி தலைமை தாங்கினார். இந்நிகழ்வில் மறைந்த 106 கழக உறுப்பினர்களுக்கு அஞ்சலி செலுத்தி, மறைந்த 106 கழக உறுப்பினர்கள் குடும்பத்தினருக்கு தலா ரூ.5000 வீதம் ரூ. 5 லட்சத்து 30 ஆயிரம் கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் சீராப்பள்ளி பேரூர் செயலாளரும், பேரூராட்சி துணைத் தலைவருமான ந.செல்வராஜ், இரா.புதுப்பட்டி பேரூர் செயலாளரும், பேரூராட்சி துணைத் தலைவருமான பெ.ஜெயக்குமார், நாமகிரிப்பேட்டை பேரூர் செயலாளரும், பேரூராட்சி துணைத் தலைவருமான கே.அன்பழகன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் சி.விஸ்வநாத், தலைமை பொதுக் குழு உறுப்பினர் குணசேகரன், விவசாய அணி துணை அமைப்பாளர் சண்முகம், தொ.ஜேடர்பாளையம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு விற்பனை சங்க தலைவர் இளையப்பன், மகளிர் அணி அமைப்பாளர் ஜோதிலட்சுமி, ஒன்றிய அவை தலைவர் அய்யாக்கண்ணு, ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் ரமேஷ்குமார், கேசவன், ஒன்றிய கழக நிர்வாகிகள் அருள், காந்தா, கதிரவன், செந்தில், முருகன், செவ்வந்தி உள்ளிட்ட கழக நிர்வாகிகள், பொது மக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**ராசிபுரம்** ஒன்றியத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் ராசிபுரம் ஒன்றிய கழக செயலாளரும், ஒன்றி குழுத் தலைருமான கே.பி. ஜெகநாதன் தலைமை தாங்கினார். இந்நிகழ்வில் வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதி வேந்தன், கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி ஆகியோர் கலந்து கொண்டு மறைந்த 92 கழக உறுப்பினர்களுக்கு அஞ்சலி செலுத்தி, மறைந்த 92 கழக உறுப்பினர்கள் குடும்பத்தினருக்கு தலா ரூ.5000 வீதம் ரூ. 4 லட்சத்து 60 ஆயிரம் வழங்கினர்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட பொருளாளர் ஏ.கே.பாலச்சந்திரன், இராசிபுரம் நகர கழக செயலாளர் என்ஆர்.சங்கர், பிள்ளாநல்லூர் பேரூராட்சி தலைவரும், பேரூர் செயலாளருமான அ.சுப்பிரமணியம், பொதுக்குழு உறுப்பினர் குணசேகரன், ஒன்றிய குழு துணை தலைவர் சந்திரா சிவகுமார், ஒன்றிய குழு உறுப்பினர் அருளரசன், சத்யா வெங்கடாசலம், பொருளாளர் முத்துசெல்வம், துணை செயலாளர் ரங்கசாமி, மாவட்ட தொண்டரணி தலைவர் பூபதி, மாநில மருத்துவரணி துணை செயலாளர் ராஜேஸ்பாபு, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் சி.விஸ்வ நாத், பொறியாளர் அணி அமைப்பாளர் கிருபா கரன், மாவட்ட பிரதி நிதிகள் பாலமுருகன், கண்ணன், ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் சிவசேகரன், மாணவரணி ரவி, பேரூர் இளைஞர் அணி அமைப்பாளர் சுரேஷ் மற்றும் கிளை செயலாளர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**ராசிபுரம்** ஒன்றியம் பட்டணம் பேரூரில் நடைபெற்ற நிகழ்ச்சியில் ஒன்றிய கழக செயலாளரும் ஒன்றிய குழு தலைவருமான கே.பி. ஜெகநாதன் தலைமை தாங்கினார். பட்டணம் பேரூர் கழக செயலாளர் பொன். நல்லதம்பி முன்னிலை வகித்தார். இந்நிகழ்வில் மறைந்த 21 கழக உறுப்பினர்களுக்கு அஞ்சலி செலுத்தி, மறைந்த 21 கழக உறுப்பினர்கள் குடும்பத்தினருக்கு தலா ரூ.5000 வீதம் ரூ. 1 லட்சத்து 5 ஆயிரம் கே.ஆர். என்.இராஜேஸ்குமார் எம்.பி வழங்கினார். இந்நிகழ்வில் மாவட்ட பொருளாளர் ஏ.கே.பாலசந்தர், மாநில மருத்துவரணி துணை செயலாளர் ராஜேஸ்பாபு, பொதுக்குழு உறுப்பினர் குணசேகரன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

**சேந்தமங்கலம்** ஒன்றியத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சேந்தமங்கலம் சட்டமன்ற உறுப்பினர் கே.பொன்னுசாமி தலைமை தாங்கினார். சேந்தமங்கலம் ஒன்றிய கழக செயலாளர் அ. அசோக்குமார் முன்னிலை வகித்தார். இந்நிகழ்வில் மறைந்த 118 கழக உறுப்பினர்களுக்கு அஞ்சலி செலுத்தி, மறைந்த 118 கழக உறுப்பினர்கள் குடும்பத்தினருக்கு தலா ரூ.5000 வீதம் ரூ. 5 லட்சத்து 90 ஆயிரம் கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி வழங்கினார். இந்நிகழ்வில் பேரூர் கழக செயலாளர்கள் என். தனபால், முருகேசன், மாவட்ட துணை செயலாளர் ராணி, ஒன்றிய பெருந் தலைவர் மணிமாலா சின்னுசாமி மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

**எருமப்பட்டி** ஒன்றியத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் ஒன்றிய கழக செயலாளர் பாலு (எ) பாலசுப்ரமணியன் தலைமை தாங்கினார். சேந்தமங்கலம் சட்டமன்ற உறுப்பினர் கே.பொன்னுசாமி, பேரூர் கழக செயலாளர் சேர்மன் பழனியாண்டி ஆகியோர் முன்னிலை வகித்தனர். கடந்த மார்ச் 2021 முதல் தற்பொழுது வரை மறைந்த 246 கழக உறுப்பினர்களுக்கு அஞ்சலி செலுத்தி, மறைந்த கழக உறுப்பினர்கள் குடும்பத்தினருக்கு தலா ரூ.5000 வீதம் ரூ.12 லட்சத்து 50 ஆயிரம் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் குடும்ப நல நிதியாக கே.ஆர்.என். இராஜேஸ்குமார் எம்.பி வழங்கினார்.

இந்நிகழ்வில் மாநில இளைஞர் அணி துணை செயலாளர் சி.ஆனந்தகுமார், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் சி.விஸ்வநாத், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் கலையரசன், தலைமை செயற்குழு உறுப்பினர் பவித்திரம் கண்ணன், அரசு வழக்கறிஞர் வ.க.அறிவழகன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

**எருமப்பட்டி பேரூரில்** நடைபெற்ற நிகழ்ச்சியில் ஒன்றிய கழக செயலாளர் பாலு (எ) பாலசுப்ரமணியன் தலைமை தாங்கினார். சேந்தமங்கலம் சட்டமன்ற உறுப்பினர் கே.பொன்னுசாமி, பேரூர் கழக செயலாளரும், பேரூராட்சி சேர்மன் பழனியாண்டி முன்னிலை வகித்தனர். இதில் மறைந்த 4 கழக உறுப்பினர்களுக்கு அஞ்சலி செலுத்தி தலா ரூ.5000 வீதம் ரூ.20 ஆயிரம் கழக உறுப்பினர்கள் குடும்பத்தினருக்கு கே.ஆர்.என். இராஜேஸ்குமார் எம்.பி வழங்கினார்.

**கொல்லிமலை** ஒன்றியத்தில் உள்ள 14 ஊராட்சியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் ஒன்றிய கழக செயலாளர் எஸ்.செந்தில் முருகன் தலைமை தாங்கினார். பொதுக்குழு உறுப்பினர் கு.காளியப்பன் வரவேற்றார். இந்நிகழ்வில் மறைந்த 50 கழக உறுப்பினர்களுக்கு அஞ்சலி செலுத்தி, மறைந்த 50 கழக உறுப்பினர்கள் குடும்பத்தினருக்கு தலா ரூ.5000 வீதம் குடும்பத்திற்கு ரூ. 2 லட்சத்து 50 ஆயிரம் கே.ஆர். என்.இராஜேஸ்குமார் எம்.பி வழங்கினார்.

**சேந்தமங்கலம்** ஒன்றிய செயலாளர் அ.அசோக்குமார், மாநில இளைஞரணி துணைச் செயலாளர் சி.ஆனந்தகுமார், நாமக்கல் தெற்கு நகர செயலாளர் ராணா ஆர்.ஆனந்த் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் சி.விஸ்வநாத், மாவட்ட விவசாய தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் பாலா என்கின்ற பாலசுந்தரம், ஈஸ்வரன், தனசேகரன், பிரபாகரன், முருகேசன், பழனிச்சாமி, நேரு உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



சென்னை தெற்கு மாவட்டம் மதுரவாயல் வடக்கு பகுதி முகப்பேர் 92 வது வட்ட சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞரின் நூற்றாண்டு விழாவை கொண்டாடும் வகையில் இரண்டு நாள் கிரிக்கெட் போட்டி நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு வட்ட செயலாளர் எம்.எம். ஜெயரத்தினம் தலைமையில் மதுரவாயல் வடக்கு பகுதி செயலாளரும் 11 வது மண்டலகுழு தலைவர் நொளம்பூர் வே ராஜன் முன்னிலையில் மதுரவாயல் வடக்கு பகுதி பகுதி துணை செயலாளர் எம்.ஏ.செந்தில்சுரேஷ், மாவட்ட பிரதிநிதி எம்.சி.எழிலரசு, பகுதி பிரதிநிதி எம்.எஸ்.ஜெயசிம்மன் பகுதி அமைப்பாளர்கள் எம்.பி.நவராஜ், எம்.என்.ராஜ்கமல் வட்ட அவைத் தலைவர் எம்.எஸ். சந்தானம் ஆகியோர் வரவேற்பு ஆற்ற மதுரவாயல் சட்ட மன்ற உறுப்பினர் காரம் பாக்கம் க. கணபதி வெற்றி கோப்பையை வழங்கினார்.

# இமாசல பிரதேசத்தில் மழை-வெள்ளம்!

சிம்லா,ஜூலை.17-

இமாசல பிரதேசத்தில் மழைவெள்ளம் காரணமாக உயிரிழந்தோர் எண்ணிக்கை 108ஆக அதிகரித்துள்ளது. மேலும் 12 பேர் மாயமாகியுள்ளனர்.

நிலச்சரிவு காரணமாக, 860 சாலைகளில் போக்குவரத்து தடைபட்டுள்ளது. 667 வீடுகள் முழுமையாகவும், 1,200 க்கும் மேற்பட்ட வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன.

இமாசல பிரதேசத்தில் கடந்த சில தினங்களாக பெய்த கனமழை, மாநிலத்தையே புரட்டிப் போட்டுள்ளது. உயிர்ச் சேதத்துடன் பெருமளவில் உள்கட்டமைப்புச் சேதமும் ஏற்பட்டுள்ளது.

மீட்புநிவாரணப் பணிகளுக்காக, மத்திய அரசிடம் ரூ.2,000 கோடி இடைக்கால நிதி கோரப்பட்டுள்ளதாக, முதல்வர் சுக்வீந்தர் சிங் சுக்கு கூறினார்.

## சென்னை கிழக்கு மாவட்ட தொண்டரணி

# துணை அமைப்பாளர் எல்.எட்வின் சகோதரி ஜெ.விக்டோரியா மறைவு!

## கழக முன்னணியினர் அஞ்சலி!

சென்னை, ஜூலை, 17 - சென்னை கிழக்கு மாவட்ட தொண்டர் அணி மாவட்ட துணை அமைப்பாளர் எல். எட்வின் சகோதரி ஜே. விக்டோரியா நேற்று (16-07-2023) இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

செய்தியறிந்ததும், கழக முன்னணியினர், தோழர்கள் திரளாகச் சென்று மறைந்த விக்டோரியா அவர்களின் உடல் மீது மலர் மாலை வைத்து இறுதி அஞ்சலி செலுத்தினார்.

அன்னாரின் இறுதி ஊர்வலம் இன்று (17-07-2023) மாலை 3 மணிக்கு, எண்:11, சுந்தர் தெரு, எழும்பூரில் உள்ள அவரது இல்லத்தில் இருந்து புறப்பட்டு, கீழ்ப்பாக்கம் கல்லறையில் நல்லடக்கம் செய்யப்படுகிறது.

# சில வரிச் செய்திகள்

## ஹெல்மெட் அணிந்தால் தக்காளி இலவசம்!




தர்மபுரி,ஜூலை.17-

போக்கு வரத்து விதிகளை கடைபிடித்து இரு சக்கர வாகனகங்களில் ஹெல்மெட் அணிந்து வந்தவர்களுக்கு வழக்கறிஞர் ( மாட்லாம்பட்டியை சேர்ந்த சுபாஷ்) ஒருவர் தேடி தேடி இலவசமாக தக்காளி வழங்கியதாக வீடியோ ஒன்று சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது.

தர்மபுரி நான்கு ரோடு சிக்னலில் பைக்கில் ஹெல்மெட் அணிந்து போக்குவரத்து விதிமுறைகளை பின்பற்றுபவர்களுக்கு தர்மபுரி மாவட்டம் மாடலாம்பட்டி பகுதியை சேர்ந்த சுபாஷ் என்பவர் ஹெல்மெட் அணிந்து வந்தவர்களுக்கு தக்காளி இலவசமாக வழங்கினார். சாலை விதிகளை மதிப்பவர்களை ஊக்குவிக்கும் விதமாக இதனை செய்ததாக அவர் கூறினார்.

## அமெரிக்கா -அலாஸ்கா பகுதியில்

# சக்தி வாய்ந்த நிலநடுக்கம்!



அமெரிக்கா,ஜூலை.17-

நிலநடுக்கத்தைத் தொடர்ந்து அமெரிக்க சுனாமி எச்சரிக்கை அமைப்பு சுனாமி எச்சரிக்கையை விடுத்துள்ளது.

அமெரிக்காவின் அலாஸ்கா பகுதியில் நேற்று 7.4 ரிக்டர் அளவுகோலில் சக்தி வாய்ந்த பெரிய நிலநடுக்கம் ஏற்பட்டதாக அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இந்த நிலநடுக்கமானது, கடலுக்கடியில் 9.3 கிமீ ஆழத்தில் மையம் கொண்டிருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது. சுனாமி எச்சரிக்கையைத் தொடர்ந்து அங்கு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## தக்காளி விற்று ஒரே மாதத்தில்

# கோடீஸ்வரர் ஆன விவசாயி!



மும்பை,ஜூலை.17-

மகாராஷ்டிராவில் ஒரு தக்காளி வியாபாரி ஒரே மாதத்தில் கோடீஸ்வரர் ஆகியிருக்கிறார்.

விண்ணை முட்டும் தக்காளி விலை காரணமாக தக்காளிகளை அதிகம் பயிரிட்டிருந்த வியாபாரிக்கு பண மழை கொட்டியுள்ளது.

இதனால் போட்டி போட்டுக்கொண்டு வியாபாரிகள் பலரும் அவரிடம் தக்காளி பெட்டிகளை வாங்கிச் சென்றனர். கடந்த ஒரு மாதத்தில் மட்டும் 13 ஆயிரம் பெட்டிகள் தக்காளி விற்ற துக்காராம், ஒன்றரை கோடி ரூபாய் வருவாய் ஈட்டியுள்ளார்.

## தமிழ்நாட்டில்

# 10 மாவட்டங்களில் மழைக்கு வாய்ப்பு!

சென்னை,ஜூலை.17-

தமிழ்நாட்டில் 10 மாவட்டங்களில் மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தகவல் தெரிவித்துள்ளது. நீலகிரி, கோவை, ஈரோடு, சேலம், திண்டுக்கல், தேனீ, மதுரை, விருதுநகர், இராமநாதபுரம், தூத்துக்குடியில் இரவு 7 மணி வரை லேசானது முதல் மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தகவல் தெரிவித்துள்ளனர்.

## இலங்கை கடற்படையால் சிறைபிடிக்கப்பட்ட

# 22 மீனவர்கள் சென்னை திரும்பினர்!

சென்னை,ஜூலை.17

இலங்கை கடற்படையால் சிறைப்பிடிக்கப்பட்ட 22 மீனவர்கள் சென்னை திரும்பினர். அவர்களுக்கு விமான நிலையத்தில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

கடந்த மாதம் 22ம் தேதி ராமேஸ்வரத்தை சேர்ந்த 7 மீனவர்கள், நாகை மாவட்டத்தை சேர்ந்த 7 மீனவர்கள், புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த 6 மீனவர்கள், கடலூர் மாவட்டத்தைச் சேர்ந்த 2 மீனவர்கள் என மொத்தம் 22 பேர் மீன் பிடிக்க சென்ற போது இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர். சிறையில் அடைக்கப்பட்ட அவர்கள் பின்னர் விடுவிக்கப்பட்டனர்.

# தொலைந்து போகாமல் இருக்க புதிய வழி!




பீஜிங்,ஜூலை.17-

சீனாவில் உள்ள அழகு நிலையம் ஒன்றில், மறதி (Alzheimer) நோயால் பாதிக்கப்பட்டுள்ள முதியவர்கள் தொலைந்து போனால் எளிதில் கண்டறிய உதவியாக அவர்களின் முகவரி, தொலைபேசி எண் உள்ளிட்ட விவரங்கள் இலவசமாக பச்சை குத்தப்படுகிறது.

தொலைந்து போகும் வலியை விட, பச்சை குத்தும் வலி பெரிதல்ல என பலரும் இம்முயற்சிக்கு ஆதரவு தெரிவித்து வருகின்றனர்.